**Minutes of the Public Hearing Meeting held on 07.01.2025 at 12.00 PM in Dr.Siddhar Swamigalin Sri Balamurugan Aalaya Annathaana Mandapam, Opposite to Balamurugan Temple, Koppampatti Village, Kulathur Taluk, Pudukkottai District to establish M/s. V. Sasikumar Rough Stone and Gravel Quarry with an extent of 2.07.0 Ha at S.F.Nos. 30/1, 30/3, 30/4, 30/5, 30/6, 30/7, 30/8A, 30/9, 30/10, 30/11 and 31/2 of Killukulavaipatti Village, Kulathur Taluk, Pudukkottai District.**

**Name of the Project:**

M/s. V. Sasikumar Rough Stone and Gravel Quarry with an extent of 2.07.0 Ha at S.F. Nos. 30/1, 30/3, 30/4, 30/5, 30/6, 30/7, 30/8A, 30/9, 30/10, 30/11 and 31/2 of Killukulavaipatti Village, Kulathur Taluk, Pudukkottai District.

**List of Officials participated in the meeting:**

1. Thiru. A. Akbar Ali,
   Revenue Divisional Officer,
   Illuppur.

2. Thiru. K. Selvakumar,
   District Environmental Engineer,
   Tamil Nadu Pollution Control Board,
   Pudukkottai District.

3. Thiru. R. Kaviyarasu,
   Tahsildar,
   Kulathur.

4. Thiru. K. Deepan,
   Revenue Inspector,
   Killukkottai.

5. Tmt. R. Baby Rani,
   Block Development Officer,
   Kunnandarkoil Panchayat Union,
   Kunnandarkoil.

6. Thiru. S. Karuththapandiyan,
   Village Administrative Officer (a/c),
   Killukkottai,
   Pudukkottai

7. Thiru. S. Matheswaran,
   Village Administrative Officer,
   Themmavur,
   Pudukkottai.

8. Thiru. A. Marimuthu,
   Special Sub Inspector,
   Udaiyalipatti Police Station,
   Pudukkottai.

9. Thiru. M. Venkada Subramanian,
   Assistant Engineer,
   Tamil Nadu Pollution Control Board,
   Pudukkottai District.

10. Thiru. D. Arunkumar,
    Assistant Engineer,
    Tamil Nadu Pollution Control Board,
    Pudukkottai District.

**List of Participants related to the project:**

1. Thiru. Gobinath,
   Senior Environmental Engineer,
   Eco Tech Labs Private Limited,
   Chennai.

In the public hearing, 90 persons were participated, including Government Officers, Project proponents and the general public. (Enclosed video Annexure-A).

**Welcome note given by District Environmental Engineer:**

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Pudukkottai District has welcomed the Revenue Divisional Officer, Illuppur who presided over the function. He welcomed the Tahsildar, Kulathur, other revenue officials and other Government officials. He also welcomed the Proprietor of M/s. V. Sasikumar Rough Stone and Gravel Quarry, Project Proponent, Press, NGOs and general public who were attended the Public Hearing meeting.

He also informed that as per Ministry of Environment & Forest, New Delhi vide EIA Notification dated 14.09.2006, certain type of projects, public opinion has to be obtained before the issue of Environment Clearance. He added that the public notice informing the conducting of public hearing was published in The Dinathanthi & The Times of India on 30.11.2024. This public hearing was conducted for M/s. V. Sasikumar Rough Stone and Gravel Quarry with an extent of 2.07.0 Ha at S.F.Nos. 30/1, 30/3, 30/4, 30/5, 30/6, 30/7, 30/8A, 30/9, 30/10, 30/11 and 31/2 of Killukulavaipatti Village, Kulathur Taluk, Pudukkottai District to obtain the views of public.

He also informed that the views of public would be recorded and it would be forwarded to the State Environment Impact Assessment Authority, Chennai after getting approval from the District Collector, Pudukkottai.

Distric Environmental Engineer informed that M/s. V. Sasikumar Rough Stone and Gravel Quarry project proponent would explain about the project after that the public could give their opinion either verbally or in writing about the project.

**Revenue Divisional Officer, Illuppur:**

He welcomed the gathering and informed that the Project Proponent would explain about their proposed project outlay and Environmental Impact Assessment study carried out through Power Point Presentation.

**Power Point Presentation by the Project Proponent:**

Thiru. Gobinath, Senior Environmental Engineer, Eco Tech Labs Private Limited, Chennai of V.Sasikumar Rough Stone and Gravel Quarry has explained about the details of the project outlay, Environmental Impact Assessment report and

Environmental Management Plan through Power Point Presentation. (Copy of the detail is enclosed in Annexure -B).

**District Environmental Engineer:**

The District Environmental Engineer requested the public to register their views on this project either verbally or in writing by giving their name and village details.

Followed by this, Public Hearing process started.

**1. Thiru.K. Pandiyan,Koppampatti**

He started his speech by greeting everyone and introducing himself as K.Pandiyan from Koppampatti. He informed that he was a graduate. Thiru.Sasikumar who asks permission for this quarry have already operated a stone quarry. Now, if he operates the quarry, about forty families would get direct benefits from it. He added that the other quarry owners have employed other state employees due to their selfishness but Thiru.Sasikumar have employed workers only the local people. Because of it 40 families were benefitted. He also said that he belongs to this village. The quarry was in operation since his birth and Koppapatti village had a good development. Further he added that now in the meantime, when the quarry was not in operation these forty families have under went very worst financial crisis. The quarries were operated in that area and knows that two big quarries were operating in that area. He also said that people did not get any benefit from those quarries because North Indian labours only working there. So, we didn't get any benefit from those quarries. He further informed that now, if Thiru.Sasikumar operates a quarry the local people will be employed as driver and operator and they will get direct benefits. He believed that it will create a social environment in the village. He said that he is a graduate and he wants economic development to him, so, he need stone quarry. He registered his support by saying that asking the authorities must to grant permission to stone quarry.

**2. Thiru.Arumugam, Koppampatti**

He welcomed Revenue department officials, important people from village and stone quarry owners for the public hearing meeting organised by TNPCB. He introduced himself as Arumugam from Dharmapuri District and he came to this

village for 20 years. He added that he had seen this village 20 years before when he came to this village and now after 20 years. The development of the village is 100 percentage due to the village people who break stones, shed their blood and work hard. He also said that why he left Dharmapuri and work here, Also if we did not develop the business in the local area, neither the village nor the people no one will develop. He learnt it from himself. He told that the drivers, operators and stone breaking workers in the surrounding area belong to this village. He further added that more than 500 people involve in this business and working. More than 500 means 500 families which means 5000 people living around this village depends on the quarry. He said that the quarry was not operated for two years due to which the people who worked in the village travelled 30kms, 40kms, even 100 kms like him to work in Kerala, Andhrapradesh. He further said that they were working without safety, some of them even lost their leg, hand and even some people died. If they worked in local, if anything happens like this the local people, relatives could help. They even approach the company and settle the issue with compensation. He told that so that only they should do business in their own village and that is safe for all. He questioned that if anything happens out of town, whether they will ask. If any accident occurred to their driver in Thanjavur whether we can ask anything, he questioned. Only if it happened locally they can ask anything. He stated that he appealed to the local of the village is only they can improve their livelihood. He said that one of the need for uplift of their livelihood. If the economy is going out from the village and they should earn what they need from their village. He further said that people should welcome it and keeping this in mind. He thanked the authorities, village people and quarry owners for the opportunity and registered his support opinion for the project.

**3. Tmt. Maruthambal, Koppampatti**

She introduced herself as Tmt. Maruthambal from Koppampatti. She informed that her husband was working in the crusher. She added that if she wants to educate her children, then she needs stone quarry. She thanked and registered her support opinion to the project.

**4. Thiru. Karuppasamy, Koppampatti**

He said that his name is Karuppasamy from Solagampatti. He was working in Sasikumar stone quarry. He was working as a driver for the past two years. He

stated that due to non operation of quarry it is difficult for him to get food. He requested that only if quarry is operated his family and people from surrounding villages will get work. He thanked and registered his support opinion to this stone quarry.

**5. Thiru. Nadanasundhar, Thanjavur**

He introduced his name is Nadanasundhar from Thanjavur. He informed that he was working in Sasikumar rough stone quarry for the past ten years. The people came here have told that education have not improved, sports have not developed. But as for as he knows that for the past ten years, the company has done many financial helps for school development and sports in the surrounding villages. He added that some people said that they are not using human power. The workers got their hand or leg broken when human power is used. Only for that dangerous situation human power is not used. For that difficult situation only, they were using machines. He said that this work cannot be done entirely with human power and it cannot be done entirely without machines. He stated that people from 50, 60 families in the surrounding villages was given work in rotation basis. We encourage sports among youth, and we are giving donation who was asked for the past ten years. They have also given donations to Aachapatti and Kariyapatti for school building renovation. He told that only if stone quarry is operated well, they can earn and they can help whatever possible for school education development. They have helped their workers and for school education development by giving donations. He said that this stone quarry should operate. The majority of the people here depend on the stone quarries than the agriculture. He added that they abide by the rules given by the Government and TNPCB and they doing something. He iformed that they are not doing things for not affecting the public and we want to develop. He registered his support opinion by saying that the stone quarry must be operated.

**6. Thiru. Suthanthiraselvan, Koppampatti**

He introduced himself as Suthanthiraselvan from Koppampatti. He said that he was working in the crusher for the past 15 years. As the stone crusher was operated, the village people got huge employment opportunity. He added that M-sand and P-sand were obtained due to this quarry, since the river sand was not available, M-sand and P-sand was being used in the construction. He stated that there is no objection to operate stone quarry and registered his support opinion to

the stone quarry.

**7. Thiru. Sannasi, Koppampatti**

He said that his name is Sannasi from Koppampatti. He informed that he was a lorry driver for the past eight years. Since the quarry is closed for the past two years, it was very difficult for them. He said that they cannot form a group and cannot do anything and cannot ask money. They cannot ask for the owners. The livelihood was not good so they cannot be asked. He stated that if the stone quarry operates they can develop and make a livelihood. He registered his support opinion by saying that he need stone quarry.

**8. Thiru. Veerakumar, Koppampatti**

He said that his name is Veerakumar from Koppampatti He was working in Sasikumar quarry for the past ten years. Since the quarry was not under operation for the past two years, around 20 to 30 people were unemployed and staying at home and it is very difficult to survive. He registered his support opinion by stating that permission must be given to the stone quarry and there is no objection to him.

**9. Tmt. Chellammal, Koppampatti**

She introduced herself as Chellammal. She stated that permission should be given to Sasikumar to operate the stone quarry and they need stone quarry .They were working in Sasikumar crusher. She added that she was unemployed for the past six to seven years. People worked for Sasikumar have to go to other village doing work for weed plucking or work for others. She added that they need stone quarry and the crusher should be operated. She registered her support opinion to the stone quarry.

**10. Tmt. Marikannu, Koppampatti**

She said that her name is Marikannu from Koppampatti and she is working in sasikumar crusher. She added that stone quarry permission should be given to the stone quarry and he is like her brother and hence only they can work, educate their children and have food. She registered her support opinion for the project by saying that they need stone quarry.

**11. Tmt. Pandimeena, Koppampatti**

She introduced herself as Pandimeena and her father name is Arumugam

and he is working in Sasikumar stone quarry. She informed that they won't think he is a labour and treat everyone as alike. Many of them present here was working for him only for this reason. She also said that if the stone quarry did not operate, everyone might leave this area. Those who said opposed opinion previously it were worked there, once their children grew up and went outside, and their needs are over. They are objecting stone quarry because their children would take care of them. Even then, when the quarry is present the houses were damaged but they would say they need stone quarry. She further informed that if they are objecting now means it is their personal opinion. She added that if the families staying here are need to develop for stone quarry is required. She registered her support opinion by saying that permission should be given to the stone quarry.

**12. Tmt. Kavitha, Koppampatti**

She introduced herself as Kavitha from Koppampatti .She stated that they are about 40 families working together and everyone is fine and he is doing good for the village. He must need stone quarry. She further added that they need to educate their children, so they must need stone quarry. She requested that the permission should be given to their owner's stone quarry. She also told that their owner did many things to their village and to people. They are doing well. She stated that they were 40 families and quarry workers working together are good. She registered her support opinion to this project.

**13. Thiru. Mathialagan, Koppampatti**

He introduced himself as Mathialagan. He stated that when the quarry operates people from ten villages were survived it. But today they were going for work to next village. He said that they woke up by 4 am and went for work. He said that if there is no work and they returned to home. They had no employment opportunity. He added that all the stone quarries should be operated and they to do work. He registered his support opinion for the project.

**14. Thiru. Murugesan, Thuvakudi**

He introduced himself as Murugesan from Thuvakudi and working here. He informed that the livelihood of the people here depends on the stone quarry. Whether it is breaking stones or driving compressor vehicle, the people were affected without any livelihood for the past two years. He further said that, people

should not have hunger and poverty. Death can come anytime but it should not happened because of hunger and poverty. The government would not simply see this. He also said that in order to provide livelihood to the people, he requested the authorities permission should be given to operate the stone quarry. The stone quarry owner is a good and humane person. Though there is no work he was helping 40 to 50 families without any profit from it. They are doing it so that the families staying there could live. He concluded by saying that the government should propose and give consent so that people will get employment and registered his support.

**15. Thiru. Ravi ,Koppampatti**

He said that his name is Ravi from Koppampatti. He is working in R.V crusher for fifteen years. He further added that he only knows this job and he did not know any other job to do. He registered his support opinion for requested to give permission to the stone quarry.

**16. Thiru. Sakthivel ,Koppampatti**

He introduced himself as Sakthivel from Koppampatti. He said that about 40 to 50 families depend on the stone quarry and improving their livelihood. They are struggling for the past two years since there was no work. He concluded by saying that permission should be granted to stone quarry in the interest of the people and registered his support opinion.

**17. Thiru. Vadivel ,Koppampatti**

He said that his name is Vadivel from Koppampatti and he was driver of compressor vehicle. He added that his family depends on the quarry for living. He concluded by requesting for stone quarry. He registered his support opinion by stating that he requested the authorities he needs stone quarry.

**Revenue Divisional Officer, Illuppur:**

After that, the Revenue Divisional Officer, Illuppur said that if any public has to say any comments / opinion, they can inform. Then he said that the public hearing meeting was closed as no one from the public came forwarded to say their opinion.

**Vote of Thanks:**

The District Environmental Engineer has informed that the public could submit their comments in writing at the office of the District Collector or the Tamil Nadu Pollution Control Board, Pudukkottai office. The District Environmental Engineer thanked the Revenue Divisional Officer, Illuppur for presiding over the Public hearing meeting and the other Government Officials for attending the meeting and also he thanked the Proprietors of the stone quarry, Workers, Project Proponent, NGOs, Press reporters, Police officials, social activists and general public who were participated in the Public Hearing Meeting.

The meeting came to an end

Encl.:

1. Attendance sheet of the participants(A)
2. Project Proponent's power point presentation(B)
3. Video(CD) of the Public Hearing (C)
4. Draft of Environmental Impact Assessment Report and Executive Summary in Tamil and English (D)
5. Written Petition (E) - 21 Nos.

8/1/25

**District Environmental Engineer,**
**Tamil Nadu Pollution Control Board,**
**Pudukkottai.**

8/1/25

**Revenue Divisional Officer,**
**Illuppur.**

**<u>புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் வட்டம், கொப்பம்பட்டி கிராமம், பாலமுருகன் ஆலய எதிர்புறம், Dr.சித்தர் சுவாமிகளின் ஸ்ரீ பாலமுருகன் ஆலய அன்னதான மண்டபத்தில் 07.01.2025 அன்று மதியம் 12.00 மணியளவில் நடைபெற்ற தி/ள். வ. சசிகுமார் உடைக்கல் மற்றும் கிராவல் குவாரி, விஸ்தீரணம் - 2.07.0 ஹெக்டர், புல எண். 30/1, 30/3, 30/4, 30/5, 30/6, 30/7, 30/8A, 30/9, 30/10, 30/11 & 31/2, கிள்ளுக்குளவாய்ப்பட்டி கிராமம், குளத்தூர் வட்டம், புதுக்கோட்டை மாவட்டத்தில் நிறுவிடவும், இயக்கிடவும் உத்தேசித்துள்ளது. இத்திட்டத்திற்கான பொதுமக்கள் கருத்துக் கேட்டுணரும் கூட்டத்தின் நடவடிக்கைக் குறிப்புகள்.</u>**

**<u>திட்டத்தின் பெயர்</u> :**

தி/ள். வ. சசிகுமார் உடைக்கல் மற்றும் கிராவல் குவாரி, விஸ்தீரணம் - 2.07.0 ஹெக்டர், புல எண். 30/1, 30/3, 30/4, 30/5, 30/6, 30/7, 30/8A, 30/9, 30/10, 30/11 & 31/2, கிள்ளுக்குளவாய்ப்பட்டி கிராமம், குளத்தூர் வட்டம், புதுக்கோட்டை மாவட்டம்.

**<u>கூட்டத்தில் பங்கேற்ற அலுவலர்கள்:</u>**

1. திரு. அ. அக்பர் அலி,<br>வருவாய் கோட்டாட்சியர்,<br>இலுப்பூர்.

2. திரு. கு. செல்வகுமார்,<br>மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>புதுக்கோட்டை மாவட்டம்.

3. திரு. R. கவியரசு<br>வட்டாட்சியர்,<br>குளத்தூர்.

4. திரு. க. தீபன்,<br>வருவாய் ஆய்வாளர்,<br>கிள்ளுக்கோட்டை.

5. திருமதி. ரா. பேபி ராணி,<br>வட்டார வளர்ச்சி அலுவலர்,<br>குன்றாண்டார்கோயில் ஊராட்சி ஒன்றியம்,<br>குன்றாண்டார்கோயில், புதுக்கோட்டை.

6. திரு. சு. கருத்தப்பாண்டியன்,
   கிராம நிர்வாக அலுவலர் (கூ.பொ),
   கிள்ளுக்கோட்டை,
   புதுக்கோட்டை.

7. திரு. S. மாதேஸ்வரன்,
   கிராம நிர்வாக அலுவலர்,
   தெம்மாவூர் வட்டம்,
   புதுக்கோட்டை.

8. திரு. A. மாரிமுத்து,
   காவல் சிறப்பு உதவி ஆய்வாளர்,
   உடையாளிப்பட்டி காவல் நிலையம்,
   உடையாளிப்பட்டி,
   புதுக்கோட்டை.

9. திரு. மு. வெங்கடசுப்ரமணியன்,
   உதவி பொறியாளர்,
   தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
   புதுக்கோட்டை மாவட்டம்.

10. திரு. து. அருண்குமார்,
    உதவி பொறியாளர்,
    தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
    புதுக்கோட்டை மாவட்டம்.

<u>திட்டம் சம்பந்தப்பட்ட பங்கேற்பாளர்கள் :</u>

1. திரு. கோபிநாத்,
   முதுநிலை சுற்றுசூழல் பொறியாளர்,
   ஈக்கோ டெக் லேப்ஸ் பிரைவேட் லிமிடெட்,
   சென்னை.

**அரசு அலுவலர்கள், திட்ட முனைவோர் மற்றும் பொதுமக்கள் உட்பட மொத்தம் 90 நபர்கள் பங்கேற்றனர்.** (இணைப்பு – 'அ' வாயிலாக பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது).

**<u>மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், புதுக்கோட்டை அவர்கள் கீழ்க்கண்டவாறு வரவேற்புரை ஆற்றினார்கள்:</u>**

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், புதுக்கோட்டை மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டத்திற்கு வருகை புரிந்து தலைமை தாங்க வந்திருக்கும் வருவாய் கோட்டாட்சியர், இலுப்பூர் அவர்கள் மற்றும் இக்கூட்டத்தில் பங்குபெற்ற வட்டாட்சியர், குளத்தூர் வட்டம், மற்ற வருவாய் துறை அதிகாரிகள், காவல்துறை அதிகாரிகள், தி/ள். வ. சசிகுமார் உடைக்கல் மற்றும் கிராவல் குவாரி நிறுவன உரிமையாளர், திட்ட பிரதிநிதிகள், பணியாளர்கள், சமூக ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

பின்னர், மத்திய சுற்றுச்சூழல், வனத்துறை மற்றும் பருவநிலை மாற்றத்திற்கான அமைச்சகத்தின் 14.09.2006 அன்று வெளியிடப்பட்ட சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிவிக்கையின்படி, சிலவகைத் திட்டங்களுக்கு சுற்றுச்சூழல் அனுமதி வழங்குவதற்கு முன் பொதுமக்கள் கருத்துக் கேட்டுணரும் கூட்டம் நடத்தப்பட்டு பொதுமக்களின் கருத்துக்களைப் பெறுவது அவசியமாகிறது. இது தொடர்பாக தினத்தந்தி மற்றும் தி டைம்ஸ் ஆப் இந்தியா நாளிதழ்களில் 30.11.2024 அன்று பொது அறிவிப்பு வெளியிடப்பட்டு இருந்ததை சுட்டிக்காட்டினார். இன்று நடைபெறும் பொதுமக்கள் கருத்துக் கேட்டுணரும் கூட்டம் தி/ள். வ. சசிகுமார் உடைக்கல் மற்றும் கிராவல் குவாரி என்ற நிறுவனம் புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் வட்டம், கிள்ளுக்குள்வாய்ப்பட்டி கிராமம், புல எண். 30/1, 30/3, 30/4, 30/5, 30/6, 30/7, 30/8A, 30/9, 30/10, 30/11 & 31/2 ஆகியவற்றில் 2.07.0 ஹெக்டேர் விஸ்தீரணத்தில் கல்குவாரி நிறுவிடவும், இயக்கிடவும் உத்தேசித்துள்ளது. உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டம் குறித்து பொதுமக்களின் கருத்துக்களைக் கேட்டுப் பெறுவதற்காக இக்கூட்டம் நடத்தப்படுகிறது என தெரிவித்தார்.

மேலும், பொதுமக்கள் தெரிவிக்கும் கருத்துக்கள் இங்கு பதிவு செய்யப்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் ஒப்புதலுக்குப்பின் மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம், சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்கப்படும் என மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் தெரிவித்துக் கொண்டார்.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள், தி/ள். வ. சசிகுமார் உடைக்கல் மற்றும் கிராவல் குவாரி நிறுவனத்தின் பிரதிநிதிகள் இந்த உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டம் பற்றி விவரித்தபின், பொதுமக்கள் தங்களது கருத்துக்களை வாய்மொழியாகவோ, எழுத்து மூலமாகவோ தெரிவிக்கலாம் என்று கூறினார்.

**வருவாய் கோட்டாட்சியர், இலுப்பூர்:**

வருவாய் கோட்டாட்சியர், இலுப்பூர் அவர்கள் அனைவரையும் வரவேற்று பொதுமக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டத்தை தொடங்கி வைத்து இத்திட்டப் பிரதிநிதிகளைத் திட்டம் குறித்து விவரிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

**திட்டப் பிரதிநிதி:**

திரு. கோபிநாத், முதுநிலை சுற்றுசூழல் பொறியாளர், ஈக்கோ டெக் லேப்ஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை அவர்கள் தி/ள். வ. சசிகுமார் உடைக்கல் மற்றும் கிராவல் குவாரி சார்பாக இத்திட்டம் குறித்தான விவரங்கள் வரைவு மற்றும் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு சம்பந்தமான விவரங்களை நிழற்படம் (Power Point Presentation) மூலம் விரிவாக இக்கருத்து கேட்பு கூட்டத்தில் எடுத்துரைத்தார். இதன் விபரம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது (இணைப்பு – 'ஆ')

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்:**

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள் பொதுமக்கள் தங்கள் பெயர் மற்றும் ஊர் விபரம் என்பதை தெரிவித்து அதன் பின்பு தங்களது கருத்துக்களை வாய்மொழியாகவோ, எழுத்துவடிவிலோ பதிவு செய்யுமாறு கேட்டுக்கொண்டார்.

**பொதுமக்கள் கருத்து கேட்பு:**

**1. திரு. கோ.பாண்டியன், கொப்பம்பட்டி**

அனைவருக்கும் வணக்கம் என் பெயர் கோ.பாண்டியன் கொப்பம்பட்டியை சேர்ந்தவர் தான். நான் பட்டப்படிப்பு முடித்து இருக்கிறேன். இப்பொழுது இந்த கல்குவாரிக்கு அனுமதி கேட்கும் சசிகுமார் ஏற்கனவே கல்குவாரி இயக்கியவர்தான். இப்பொழுது இவர் வந்து இயக்குவதன் மூலமாக இந்த பகுதி மக்கள் கிட்டத்தட்ட ஒரு 40 குடும்பங்கள் நேரடியாக பயன் பெறுகிறார்கள். தங்களது சுயநலத்திற்காக மற்ற குவாரி உரிமையாளர்கள் எல்லாம் குறைந்த விலையில் வெளியூர் ஆட்களை வைத்து வேலை பார்க்கும் பொழுது இந்த சசிகுமார் சுற்றியுள்ள பகுதிகளை சேர்ந்த மக்களை மட்டுமே வேலைக்கு வைத்துள்ளார். இதனால் 40 குடும்பங்கள் நேரடியாகவே பயன் பெறுகிறார்கள். மேலும் நானும் இந்த கிராமத்தைச் சேர்ந்தவன் தான். நான் பிறந்த பொழுதிலிருந்து கல்குவாரி இங்கு தான் இயங்கி கொண்டு இருக்கிறது. இதனால் இந்த கொப்பம்பட்டி கிராமத்தில் நன்றாக வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. இப்பொழுது இந்த இடைப்பட்ட காலத்தில், அதாவது கல்குவாரி இல்லாத காலத்தில் இந்த 40 குடும்பங்களும் மிக மோசமான பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாக்கப்பட்டு இருக்கிறார்கள். இந்தப் பகுதியில் கல்குவாரி இயங்கி கொண்டு தான் இருக்கிறது.

மிகப்பெரிய இரண்டு கல்குவாரிகள் இயங்கி கொண்டு இருப்பது உங்களுக்கும் தெரியும். ஆனால் இந்த கல்குவாரிகள் இயங்குவதால் மக்களுக்கு பயன் கிடையாது. ஏனென்றால், இங்கு அனைவரும் வட இந்திய ஊழியர்கள் தான் வேலை பார்க்கின்றனர். அதனால் எங்களுக்கு எந்த பயனும் இல்லை. ஆனால், இப்பொழுது சசிகுமார் என்பவருடைய கல்குவாரி இயங்கினால் இந்த பகுதி மக்கள் டிரைவர் ஆகவும், ஆபரேட்டர் ஆகவும் நேரடியாக பயன்பெறுவார்கள். இந்த கிராமத்துக்கும் ஒரு சமூக சூழலை ஏற்படுத்திக் கொடுப்பார் என்று நம்புகிறேன். மேலும் நானும் ஒரு பட்டப்படிப்பு படித்தவன், பொருளாதார ரீதியாக முன்னேற வேண்டும் என்றால் எனக்கு இந்த கல்குவாரி தேவைப்படுகிறது. அதனால் இந்த கல்குவாரிக்கு கண்டிப்பாக நீங்கள் அனுமதி கொடுக்க வேண்டும் என்று தனது ஆதரவு கருத்தினை தெரிவித்தார்.

**<u>2. திரு. ஆறுமுகம், கொப்பம்பட்டி</u>**

தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் நடத்தும் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை தந்துள்ள வருவாய்த் துறை ஐயா அவர்களுக்கும், வட்டாட்சி துறை ஐயா அவர்களுக்கும் ஊர் முக்கியஸ்தர்களுக்கும் கல்குவாரி உரிமையாளர்களுக்கும் எனது முதற்கண் வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன். என்னுடைய பெயர் ஆறுமுகம், தர்மபுரி மாவட்டம். நான் இந்த ஊருக்கு வந்து 20 வருடங்கள் ஆகின்றது. இந்த ஊர் 20 வருடங்களுக்கு முன்பு எப்படி இருந்தது என்பதை நான் வந்த பொழுது பார்த்திருக்கிறேன். இப்பொழுது இருபது வருடங்கள் கழித்து பார்க்கிறேன். இந்த ஊர் வளர்ச்சி அடைந்ததற்கு 100 சதவீதம் இந்த ஊரில் உள்ள மக்கள் கல் உடைத்து ரத்தம் சிந்தி எல்லோரும் உழைத்ததினால் தான் இந்த ஊர் இப்பொழுது நன்றாக வளர்ந்திருக்கிறது என்று சொல்ல விரும்புகிறேன். அது மட்டுமில்லாமல் நான் ஏன் தர்மபுரியில் இருந்து இங்கு வந்து வேலை செய்கிறேன் என்றால் உள்ளூரில் இருக்கின்ற தொழிலை நாம் மேம்படுத்தாமல் உள்ளுரை விட்டு வெளியூரில் வந்து நாம் எவ்வளவு உழைத்தாலும் நம்ம ஊரும் முன்னேறாது, நாமும் முன்னேற முடியாது என்பதை என்னை வைத்து நான் தெரிந்து கொள்கின்றேன், என்னை வைத்து இந்த ஊர் மக்களும் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். அது மட்டும் இல்லை இந்த சுற்றுவட்டாரத்தில் உள்ள டிரைவர், ஆப்ரேட்டர் மற்றும் கல் உடைக்கும் தொழிலாளர்கள் அனைவருமே இந்த ஊரை சேர்ந்தவர்கள் தான். கிட்டத்தட்ட 500 பேருக்கு மேற்பட்ட நபர்கள் இந்த தொழிலில் ஈடுபட்டு வேலை செய்து கொண்டு வருகிறார்கள். 500 க்கும் மேற்பட்டவர்கள் என்றால் வெறும் 500 பேர் மட்டுமல்ல 500 குடும்பம். 500 குடும்பம் என்றால் சும்மா இல்லை கிட்டத்தட்ட 5000 பேர் இந்த ஊரை சுற்றி இருக்கிறவர்கள் எல்லோருமே கிட்டத்தட்ட இதை நம்பி தான் வாழ்கின்றார்கள். அதே இது ஒரு இரண்டு ஆண்டுகளாக தடைபட்டு

இருப்பதினால் இந்த ஊரில் வேலை செய்துகொண்டு இருந்தவர்கள் அனைவருமே கிட்டத்தட்ட ஒரு 30 கிலோமீட்டர், 40 கிலோ மீட்டர், ஏன் என்னை போல 100 கிலோ மீட்டர் தாண்டி சென்று கேரளா, ஆந்திராவில் கூட வேலை செய்துகொண்டு இருக்கிறார்கள். அப்படியெல்லாம் போய் வேலை செய்து பாதுகாப்பு கூட இல்லாமல் ஒரு சிலர் இறந்தும் விடுகின்றார்கள், கை, கால் கூட இழக்கிறார்கள். இதே உள்ளூரில் வேலை செய்தால், இந்த போன்று ஏதாவது நடந்தால் உள்ளூர் மக்கள், சொந்தபந்தம் எல்லாம் அனைவருக்கும் உதவுகிறார்கள். கம்பெனியில் போய் கேட்டு உரிய இழப்பீடு கேட்டு வாங்கி கொடுக்கிறார்கள். அதனால் நாம் உள்ளூரில் தொழில் செய்வதினால் மட்டும் தான் மக்களுக்கு எல்லாருக்குமே பாதுகாப்பு. அதை விட்டுவிட்டு வெளியூர் சென்று ஏதாவது நடந்துதது என்றால் கேட்பீர்களா என்று வினாவினார். தஞ்சாவூரில் நமது டிரைவர் ஒருவருக்கு விபத்து ஏற்பட்டது என்றால் கேட்க முடியுமா? உள்ளூரில் மட்டும் தான் கேட்க முடியும் அதனால் உள்ளூர் பொதுமக்களுக்கு என்னுடைய வேண்டுகோள் என்னவென்றால் தயவு செய்து உங்களுடைய வாழ்வாதாரத்தை நீங்கள் தான் உயர்த்த வேண்டும். உங்களுடைய வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கு தேவையான ஒன்று என்னவென்றால் உங்கள் ஊரிலிருந்து பொருளாதாரம் வெளியே போகிறது என்றால் உங்களுடைய உழைப்பு உங்களுக்கு தேவையானதை உங்கள் ஊரில் இருந்தே சம்பாதிக்கின்றீர்கள். ஆக மக்கள் அனைவரும் இதை மனதில் வைத்துகொண்டு கண்டிப்பாக இதை நீங்கள் வரவேற்க வேண்டும் என்றார். வாய்ப்பளித்த அதிகாரிகளுக்கும் ஊர் பொது மக்களுக்கும் மற்றும் குவாரி உரிமையாளர்களுக்கும் நன்றி என்று கூறி தனது ஆதரவு கருத்தினை பதிவு செய்தார்

**3. திருமதி. மருதாம்பாள், கொப்பம்பட்டி**

எனது பெயர் மருதாம்பாள், கொப்பம்பட்டி. எனது வீட்டுக்காரர் கிரஷரில் தான் வேலை பார்க்கிறார். எனது குழந்தைகளை படிக்க வைக்க வேண்டும் என்றால் எனக்கு கல்குவாரி வேண்டும் நன்றி எனக் கூறி தனது ஆதரவு கருத்தினை பதிவு செய்தார்.

**4. திரு. கருப்பசாமி, சோழகம்பட்டி**

என் பெயர் கருப்பசாமி. நான் அருகில் உள்ள சோழகம்பட்டி கிராமத்தில் இருந்து வந்து, இங்கு சசிகுமார் கல்குவாரியில் தான் வேலை செய்துகொண்டு இருக்கிறேன். நான் கடந்த இரண்டு ஆண்டுகளாக அவரிடம் ஓட்டுநராக வேலை செய்துகொண்டு இருக்கிறேன். இப்பொழுது கல்குவாரி இல்லாமல் சாப்பாட்டுக்கே மிகுந்த கஷ்டமாக இருக்கிறது. அதனால் தயவு செய்து கல்குவாரி இருந்தால் எங்கள்

குடும்பம் நன்றாக இருக்கும், சுற்றி உள்ள மக்களும் வேலை பார்ப்பார்கள் நன்றி வணக்கம் எனக் கூறி தனது ஆதரவு கருத்தினை பதிவு செய்தார்.

**5. திரு. நடனசுந்தர், தஞ்சாவூர்**

எனது பெயர் நடனசுந்தர் நான் தஞ்சாவூரிலிருந்து வருகிறேன். நான் சசிகுமார் கல்குவாரியில் கடந்த பத்து ஆண்டுகளாக வேலை பார்த்துக் கொண்டிருக்கிறேன். இங்கே வந்தவர்கள் கல்வி வளர்ச்சி பெறவில்லை, விளையாட்டு மேம்படவில்லை என்றெல்லாம் சொன்னார்கள். எனக்கு தெரிந்து பத்து ஆண்டுகளாக எங்கள் நிறுவனம் சார்ந்து நான் இருக்கும் பொழுது சுற்றியிருக்கும் 10 கிராமத்தில் இருந்து வரும்போது பள்ளிக்கல்வி வளர்ச்சிக்காகவும், விளையாட்டு துறைக்காகவும் எங்களால் முடிந்த நிதி உதவியை நாங்கள் செய்துகொண்டு தான் இருக்கிறோம். மனித ஆற்றலை முழுவதுமாக பயன்படுத்தவில்லை என்று சிலர் சொல்கிறார்கள். நாங்கள் மனித ஆற்றலை பயன்படுத்தாமல் எல்லாம் இல்லை. மனித ஆற்றலை அவ்வாறு பயன்படுத்தும் பொழுது தொழிலாளர்களுக்கு கை, கால் உடைப்பு ஏற்படுகிறது. அது போல ஆபத்தான சூழ்நிலைக்கு மட்டும் தான் நாங்கள் மனித சக்தியை பயன்படுத்தி வேலை பார்க்க முடியாமல் இருக்கிறது. அது போல கடினமான சூழ்நிலைக்கு தான் நாங்கள் இயந்திரங்களை பயன்படுத்துகிறோம். இந்த வேலையை முழுவதும் மனித சக்தியை வைத்து மட்டுமே செய்ய முடியாது, இயந்திரங்கள் இல்லாமலும் இந்த வேலையை செய்ய முடியாது. இங்கு சுற்றியுள்ள கிராமங்களை சேர்ந்த 50, 60 குடும்பங்கள் மாற்று சுழற்சி முறையில் வேலை கொடுத்துக்கொண்டு தான் இருக்கிறோம். நாங்கள் விளையாட்டுத் துறை சார்ந்த அனைத்து இளைஞர்களுக்கும் ஊக்குவிக்கிறோம், கடந்த பத்து ஆண்டுகளாக யார் வந்து நன்கொடை கேட்டாலும் கொடுத்து கொண்டுதான் இருக்கிறார்கள். ஆச்சாபட்டி, கரியப்பட்டி பள்ளிகளில் இருந்தது வந்து பள்ளி கட்டடங்களை மேம்படுத்துவதற்கு எங்களுக்கு நன்கொடை தேவை என்று கேட்கும்பொழுது உடனே நன்கொடை கொடுக்கிறார்கள். அதனால் இந்த கல்குவாரி நல்லமுறையில் இயங்கி அதனால் எங்களுக்கு வருமானம் வரும்பொழுது தான் இது போல பள்ளி கல்வி வளர்ச்சிக்கு எங்களால் முடிந்த உதவியை செய்ய முடியும். எங்களிடம் வேலை செய்பவர்கள் அனைவருக்கும், மற்றும் பள்ளிக்கல்வி மேம்படுவதற்கு எங்களால் முடிந்த நன்கொடைகளையும் உதவியும் செய்து கொண்டே தான் இருக்கிறோம். அதனால் இந்த கல்குவாரி இயங்க வேண்டும். இங்கு விவசாயத்தை சார்ந்து மட்டுமே நிறைய மக்கள் இல்லை. இந்த மாதிரி கல்குவாரியை சார்ந்து தான் நிறைய மக்கள் இருக்கிறார்கள். நாங்கள் அரசு விதிமுறைகளின் படி மாசு கட்டுப்பாடு வாரியம் என்ன விதிமுறைகள் எங்களுக்கு கொடுத்திருக்கிறதோ அந்த விதிமுறைகளை மீறாமலும், சில விஷயங்களை செய்து

கொண்டும் தான் இருக்கிறோம். ஆகையினால் பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படுவது போல நாங்கள் எந்த விஷயமும் செய்யவில்லை. நாம் வளர்ச்சி பெற வேண்டும், இந்த கல்குவாரி இயங்குவது மிக அவசியம் இது தான் என்னுடைய கருத்து என்று தனது ஆதரவு கருத்தினை தெரிவித்தார்.

**6. திரு. சுதந்திரசெல்வன், கொப்பம்பட்டி**

வணக்கம் எனது பெயர் சுதந்திரசெல்வன், கொப்பம்பட்டி. நான் ஒரு 15 வருடமாக கிரஷரில் தான் வேலை செய்து கொண்டு வருகிறேன். இந்த கல்குவாரி இயங்குவதால் ஊர் மக்களுக்கு வேலை வாய்ப்பு அதிகமாக கிடைக்கிறது. இந்த கல்குவாரியிலிருந்து எம்சாண்ட் கிடைக்கிறது. மணல் கிடைக்காததற்காக எம்-சாண்ட், பி-சாண்ட் எடுத்து வீடு கட்டுவதற்கு எல்லாம் உபயோகப்படுத்தி கொள்கிறார்கள். அதனால், இந்த கல்குவாரி இயங்குவதற்கு எந்தவித தடையும் இல்லை எனக்கூறி தனது ஆதரவு கருத்தினை பதிவு செய்தார்

**7. திரு. சன்னாசி, கொப்பம்பட்டி**

வணக்கம் என் பெயர் சன்னாசி. நான் கொப்பம்பட்டி. நான் 8 வருடமாக லாரி ஓட்டிக் கொண்டிருக்கிறேன். இந்த இரண்டு வருடங்களாக கல்குவாரிக்கு தடை விதித்ததால் பெரிய திண்டாட்டமாக இருக்கிறது. ஒரு குழு அமைக்கவோ, எதுவும் செய்யவோ, காசு கேட்க முடியவில்லை அவர்களிடமும் கேட்க முடியவில்லை, பிழைப்பு எதுவும் சரி இல்லாமல் இருக்கிறது அதனால் எதுவும் கேட்க முடியவில்லை என்றார். எங்களுக்கு கல்குவாரி இருந்தால் தான் நாங்கள் முன்னேறலாம், பிழைக்கலாம் என்றார். எங்களுக்கு கல்குவாரி வேண்டும் எனக் கூறி தனது ஆதரவு கருத்தினை பதிவு செய்தார்

**8. திரு. வீரக்குமார், கொப்பம்பட்டி**

எனது பெயர் வீரக்குமார், கொப்பம்பட்டி. நான் சசிகுமார் என்பவருடைய கிரஷரில் தான் 10 வருடங்களாக வேலை செய்கின்றேன். இப்பொழுது இந்த இரண்டு வருடங்களாக கல்குவாரி இல்லாததினால் என்னை போல் ஒரு இருபது, முப்பது நபர்கள் வேலை இல்லாமல் வீட்டிலேயே தான் இருக்கின்றார்கள். இது மிகுந்த சிரமமாக இருக்கிறது. அதனால் கண்டிப்பாக அவருடைய கல்குவாரிக்கு அனுமதி கொடுங்கள். அதற்கு எங்களுக்கு எந்தவித ஆட்சேபனையும் இல்லை என கூறி தனது ஆதரவு கருத்தினை பதிவு செய்தார்.

**9. திருமதி. செல்லம்மாள், கொப்பம்பட்டி**

எனது பெயர் செல்லம்மாள், கொப்பம்பட்டி. நாங்கள் சசிகுமார் அண்ணனுக்கு கல் உடைக்க அனுமதிக்க வேண்டும். எங்களுக்கு கல்குவாரி வேண்டும். நாங்கள் அவர்கள் கிரஷரில் வேலை செய்கிறோம். எங்களுக்கு ஆறு, ஏழு வருடங்களாக வேலையே இல்லை. அவர்களிடம் வேலை பார்த்த நாங்கள் அனைவரும் வேற ஊருக்கு பிழைப்புக்கு சென்று களை வெட்டியோ, அடுத்தவர்களுக்கு வேலை செய்தோ பிழைத்துக் கொண்டிருக்கிறோம் எங்களுக்கு கல்குவாரி வேண்டும், எங்களுக்கு கிரஷர் இயங்கனும் என்று கூறி தனது ஆதரவு கருத்தினை பதிவு செய்தார்

**10. திருமதி. மாரிக்கண்ணு, கொப்பம்பட்டி**

என் பெயர் மாரிக்கண்ணு கொப்பம்பட்டி. நாங்கள் சசிகுமார் கிரஷரில் வேலை செய்கிறோம். எங்கள் அண்ணனுக்கு கல்குவாரி அனுமதி கொடுக்க வேண்டும். அவ்வாறு கொடுத்தால் தான் நாங்கள் வேலை பார்க்கலாம், பிள்ளைகளை படிக்க வைக்கலாம், சாப்பிடலாம் அதனால் எங்களுக்கு அவசியமாக கல்குவாரி தேவை என தனது ஆதரவு கருத்தினை பதிவு செய்தார்.

**11. திருமதி. பாண்டி மீனா, த/பெ. ஆறுமுகம், கொப்பம்பட்டி**

எல்லோருக்கும் வணக்கம். என் பெயர் பாண்டி மீனா. என் அப்பா பெயர் ஆறுமுகம். அவர் சசிகுமார் கல்குவாரியில் தான் வேலை பார்க்கிறார். அவர் வேலை பார்ப்பவர் என்று நினைக்காமல் அனைவரையும் ஒன்று போல தான் நடத்துவார்கள். இங்கு இருப்பவர்கள் நிறைய பேர் இதனால் தான் அவரிடம் வேலை பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த கல்குவாரி இயங்கவில்லை என்றால் அனைவரும் வெளியில் தான் கிளம்ப வேண்டும். இதற்கு முன் எதிர்ப்பு தெரிவித்தவர்கள் கூட இங்கு இருந்திருக்கிறார்கள். அவர்கள் பிள்ளைகள் பெரிய ஆளானவுடன், வெளியில் சென்றவுடன் அவர்களுடைய தேவை முடிந்து விட்டது. அதனால், அவர்கள் பிள்ளைகள் அவர்களை பார்த்துக் கொள்வார்கள் என்ற காரணத்தினால் கல்குவாரி வேண்டாம் என்று சொல்கிறார்கள். அப்பொழுது கூட இந்த கல்குவாரி இருந்த பொழுது வீடெல்லாம் சிதைந்து தான் இருக்கும். அப்படி இருந்தும் கல்குவாரி வேண்டும் என்று தான் கூறி இருப்பார்கள். ஆனால், இப்பொழுது வேண்டாம் என்று சொல்கிறார்கள் என்றால், அது அவர்களுடைய தனிப்பட்ட கருத்து. அதனால், இங்கு இன்னும் இருக்கும் குடும்பங்கள் முன்னேற வேண்டும் என்றால் கல்குவாரி வேண்டும். எனவே கல்குவாரிக்கு அனுமதி கொடுங்கள் எனக் கூறி தனது ஆதரவு கருத்தினை பதிவு செய்தார்

**12. திருமதி. கவிதா, கொப்பம்பட்டி**

எனது பெயர் கவிதா, கொப்பம்பட்டி. நாங்கள் ஒரு 40 குடும்பமாக சேர்ந்து வேலை பார்க்கிறோம். அனைவரும் நன்றாக தான் இருக்கிறார்கள். ஊருக்கு நல்லது செய்து இருக்கிறார்கள். எங்களுக்கு கல்குவாரி கண்டிப்பாக வேண்டும். எங்கள் பிள்ளைகளை படிக்க வைக்க வேண்டும். நாங்கள் எங்களது பிள்ளைகளை படிக்க வைக்க வேண்டும் என்றால் எங்களுக்கு கல்குவாரி கண்டிப்பாக வேண்டும். எங்கள் முதலாளி கல்குவாரிக்கு நீங்கள் கண்டிப்பாக அனுமதி கொடுத்து தான் ஆக வேண்டும். எங்கள் ஊருக்கு நிறைய செய்திருக்கிறார்கள், மக்களுக்கும் நிறைய செய்திருக்கிறார்கள், எல்லோரும் நன்றாக இருக்கின்றோம். நாங்கள் 40 குடும்பமும் சேர்ந்து வேலை பார்க்கிறவர்கள் அனைரும் நன்றாக இருக்கிறார்கள் வணக்கம் எனக் கூறி தனது ஆதரவு கருத்தினை பதிவு செய்தார்.

**13. திரு. மதியழகன், கொப்பம்பட்டி**

என் பெயர் மதியழகன். இந்த கல்குவாரி இயங்கும் பொழுது 10 ஊர் மக்களும் வந்து பிழைத்தார்கள். இன்றைக்கு அடுத்த ஊருக்கு வேலைக்கு போகிறோம் காலை 4.00 மணிக்கு எழுந்து போகிறோம் அங்கு வேலை இல்லை என்கிறார்கள் வந்துவிடுகிறோம் எங்களுக்கு வேலை வாய்ப்பு இல்லை. எல்லா கல்குவாரியுமே இயங்க வேண்டும் நாங்கள் வேலை பார்க்க வேண்டும் நன்றி எனக்கூறி தனது ஆதரவு கருத்தினை பதிவு செய்தார்

**14. திரு. முருகேசன், துவாக்குடி**

என்னுடைய பெயர் முருகேசன். நான் துவாக்குடியில் இருந்து இங்கு வேலைக்கு வந்து கொண்டிருக்கிறேன். இங்கு இருக்கும் மக்களுடைய வாழ்வாதாரம் என்பது கல்குவாரியை சார்ந்து தான் இருக்கிறது. இங்கு கல் உடைப்பதாக ஆகட்டும், கம்ப்ரசர் வண்டி ஓட்டுவது ஆகட்டும் கடந்த இரண்டு வருடங்களாக கல்குவாரியை இயக்காததால் தான் எந்த ஒரு வாழ்வாதாரமும் இல்லாமல் மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். பசி, வறுமை மனிதர்களுக்கு இருக்கக்கூடாது, எப்பொழுது வேண்டுமானாலும் மரணம் வரலாம். ஆனால் பசி, வறுமையால் மட்டும் மரணம் வரக்கூடாது. அதை அரசாங்கம் வேடிக்கை பார்த்துக் கொண்டும் இருக்காது. அதனால், இவர்களுக்கு வாழ்வாதாரம் கொடுக்கும் விதமாக இவர்களுக்கு கல்குவாரியை இயக்க ஆணை பிறப்பிக்க வேண்டும் என நான் கேட்டுக்கொள்கிறேன். எங்களுடைய முதலாளி மிகுந்த நல்ல மனிதநேயமிக்க மனிதர். அனைவருக்கும் மரியாதை கொடுத்து உதவி செய்யக்கூடியவர். அவர் இப்பொழுது தன்னுடைய முயற்சியால் 40, 50 குடும்பங்களுக்கு வேலை இல்லாமல் இருந்தால் கூட வேலை

கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இதனால், அவர்களுக்கு எந்த ஒரு லாபமும் கிடையாது, இருந்தாலும் இங்கே இருக்கிற குடும்பங்கள் வாழ வேண்டும் என்ற நல்ல எண்ணம் அடிப்படையில் தான் அவர் செய்து கொண்டிருக்கிறார். இது போன்ற குணம் கொண்டவர்களுக்கு அரசாங்கம் முன்மொழிந்து கல்குவாரிக்கு ஆணை பிறப்பித்து மக்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்க வேண்டும் என தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன் நன்றி எனக் கூறி தனது ஆதரவு கருத்தினை பதிவு செய்தார்.

**15. திரு. ரவி, கொப்பம்பட்டி**

என் பெயர் ரவி. ஆர்.வி. கிரஷரில் பதினைந்து வருடங்களாக வேலை பார்க்கிறேன். இதை விட்டால் எனக்கு வேறு வேலையே தெரியாது. நீங்கள் பார்த்து கல்குவாரிக்கு ஏதாவது செய்து அனுமதி கொடுங்கள் எனக் கூறி தனது ஆதரவு கருத்தினை பதிவு செய்தார்.

**16. திரு. சக்திவேல், கொப்பம்பட்டி**

என் பெயர் சக்திவேல், கொப்பம்பட்டி. இந்த கல்குவாரியை நம்பி 40, 50 குடும்பங்கள் தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்தி வருகிறார்கள். கடந்த இரண்டு வருடங்களாக எந்த வேலையும் இல்லாமல் தள்ளாடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் நலன் கருதி இந்த கல்குவாரியை அனுமதிக்க வேண்டுகிறேன் நன்றி என கூறி தனது ஆதரவு கருத்தினை பதிவு செய்தார்.

**17. திரு. வடிவேல், உலக காத்தான்பட்டி**

என் பெயர் வடிவேல், உலக காத்தான்பட்டி. நான் கம்பரசர் வண்டி ஓட்டிக்கொண்டு இருக்கேன். இதைக் கொண்டு தான் எனது குடும்பம் பிழைக்கிறது. தயவு செய்து கல்குவாரி வேண்டும் எனக் கூறி தனது ஆதரவு கருத்தினை பதிவு செய்தார்.

**வருவாய் கோட்டாட்சியர், இலுப்பூர்:**

அதற்கு பின்பு வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் பொதுமக்கள் யாரேனும் கருத்து சொல்வதாக இருந்தால் தெரிவிக்கலாம் என்று கூறினார். பின்பு பொதுமக்கள் யாரும் கருத்து தெரிவிக்க முன்வராததால் கூட்டத்தினை முடித்து வைப்பதாக தெரிவித்தார்.

**நன்றியுரை:**

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள் பொதுமக்கள் தங்கள் கருத்துக்களை எழுத்துவடிவில், மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்திலோ அல்லது தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் புதுக்கோட்டை அலுவலகத்திலோ சமர்பிக்கலாம்

என்று தெரிவித்துக் கொண்டார். தி/எ். வ. சசிகுமார் உடைக்கல் மற்றும் கிராவல் குவாரி பொதுமக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டத்திற்கு தலைமை ஏற்று நடத்திய வருவாய் கோட்டாட்சியர், இலுப்பூர் அவர்களுக்கு நன்றி கூறினார். இதர வருவாய் துறை அதிகாரிகள், கல்குவாரி நிறுவன உரிமையாளர்கள், திட்ட பிரதிநிதிகள், பணியாளர்கள், சமூக ஆர்வலர்கள், காவல்துறை அதிகாரிகள், பத்திரிக்கை நிருபர்கள் மற்றும் கலந்துகொண்ட பொதுமக்கள் அனைவருக்கும் நன்றியினை மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் தெரிவித்துக்கொண்டார்.

கூட்டம் இனிதே நிறைவுற்றது.

**இணைப்பு:**

1. கருத்துக் கேட்புக் கூட்டத்தில் கலந்துகொண்டவர்களின் வருகை பதிவேடு (அ).
2. திட்ட பிரதிநிதிகளின் நிழற்பட விளக்க உரை (ஆ)
3. கருத்துக் கேட்புக் கூட்ட நடவடிக்கைகளைப் பதிவு செய்த வீடியோ குறுந்தகடுகள் (இ).
4. சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு வரைவு விரிவான அறிக்கை மற்றும் தமிழ், ஆங்கிலத்தில் திட்ட சுருக்க உரைகள் (ஈ).
5. எழுத்து வடிவில் பெறப்பட்ட பொதுமக்களின் கருத்துக்கள்(உ) - 21 எண்ணிக்கை

8/1/25

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
புதுக்கோட்டை.

8/1/25

வருவாய் கோட்டாட்சியர்,
இலுப்பூர்